பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 03 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. வடகிழக்கு மாநிலங்களின் விரைவான வளர்ச்சிக்கான திட்டங்களை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு நிறைவேற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
2. ஹைபர்லூப் அதி விரைவு ரயில் போக்குவரத்து தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து உதவிகளையும் ரயில்வே அமைச்சகம் செய்து தரும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. லடாக் யூனியன் பிரதேசத்தில் வரும் ஆண்டு முதல் சர்வதேச கூட்டுறவு ஆண்டு கொண்டாட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
4. இஸ்ரேல் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை கடைபிடித்தால் மட்டுமே தங்கள் வசம் உள்ள அமெரிக்க, இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிக்க முடியும் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.
5. சண்டிகர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன் லஷ்மணன் - இத்தாலியன் **Filiberto** இணை பட்டம் வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

வடகிழக்கு மாநிலங்களின் விரைவான வளர்ச்சிக்கான திட்டங்களை பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு நிறைவேற்றி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

ஐஸ்வாலிலிருந்த அஸ்ஸாம் ரைபில்ஸ் தலைமையகத்தை **Zokhawsang** -க்கு மாற்றப்பட்டுள்ளதை அடுத்து அதனை இன்று திறந்து வைத்த திரு அமித்ஷா, மிஷோராம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு இது வழிவகுக்கும் என்றார்.

அம்மாநில மக்களின் நீண்டகால கோரிக்கையாக இது இருந்து வந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரலாற்று சிறப்புமிக்க இந்த முடிவை பிரதமர் திரு நரேந்திரமோடி எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் மாநிலத்தின் முன்னேற்றத்துக்கும், பாதுகாப்புக்கும் உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக அஸ்ஸாம் மாநிலம் **dergaon**-னில் காவல்துறை பயிற்சிக் கல்லூரி காவலர் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டி பேசிய அமைச்சர், வடகிழக்கு மாநிலங்களில் இருந்த தீவிரவாதக் குழுக்களுடன் பேச்சு நடத்தி அவர்களை அமைதிப் பாதையில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டதாக தெரிவித்தார்.,

அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளதால் மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றுள்ளதாகவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.,

வடகிழக்கு மாநிலங்களை மேம்படுத்த மூன்று லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி உள்ளதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அதிவேக போக்குவரத்து தொழில்நுட்பத்தில் இந்தியா விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் கருட வாகனம் என்ற ஹைபர்லூப் அதிவிரைவு ரயில் தொழில்நுட்பத்தை பார்வையிட்ட அமைச்சர், இந்த தொழில்நுட்பம் ரயில் போக்குவரத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் என்று கூறினார்.

இளம் புத்தாக்க தொழில் முனைவோரால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளை சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்பெட்டி தொழிற்சாலை அளித்திடும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த தொழில்நுட்பத்தை கொண்டு வருவதற்குத் தேவையான மின்னணு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான உதவிகளை ரயில்வே அமைச்சகம் செய்து தரும் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

முன்னதாக திருவள்ளூர் மாவட்டம் பண்ணூரில் ஜெட் வொர்க் மின்னணு தொழிற்சாலையின் உற்பத்தியை தொடங்கி வைத்து பேசிய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இம்மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கம், மணலூர் ஆகிய இடங்களில் ஆயிரத்து 112 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு தொழிற்சாலைகள் தொடங்கப்படும் என்றார்.

இந்த தொழிற்சாலை எட்டு மாதங்களில் உற்பத்தியை தொடங்கும் என்றும், எட்டாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் என்றும் கூறினார்.

பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், 80 சதவீதம் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்து வருவதாகவும், இதில் தமிழகத்தின் பங்களிப்பும் உள்ளதாக அவர் கூறினார்.

நடப்பு ஆண்டில் தமிழகத்திற்கான ரயில் திட்டங்களுக்கு ஆறாயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், மாநிலத்தில் அம்ரித் திட்டத்தின்கீழ் 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மாநிலத்தில் 715 ரயில்வே உயர்மட்டப் பாலங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகக் கூறிய அவர், தமிழகத்தில் எட்டு வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு நாட்டில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், தமிழ்மொழி பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

ஃபிட் இந்தியா திருவிழாவை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா நாளை புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் ஆரோக்கிய வாழ்வு மற்றும் துடிப்புமிக்க வாழ்க்கை முறை உடல் எடையை குறைத்து ஆரோக்கிய வாழ்வுக்கான வழிமுறைகள் ஆகியவை குறித்த விரிவான நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

உடல் தகுதியை மேம்படுத்துவதற்கான ஸ்கிப்பிங், நிலையான சைக்கிள் பயிற்சி, மல்யுத்தம்,. கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு குடியரசுத் தினத்தன்று வழங்கப்பட உள்ள பத்ம விருதுகளுக்கான பரிந்துரைகள் இன்று முதல் பெறப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

ராஷ்ட்ரீய புரஸ்கார் இணையதளத்தில் இம்மாதம் 31-ஆம் தேதி வரை இதற்கான பரிந்துரைகளை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம்.

நாட்டின் சிறந்த குடிமக்களுக்கான பத்ம விபூஷன், பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகளைப் பெறுவதற்கு கலை, இலக்கியம், கல்வி, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல், பொறியியல், குடிமைப்பணி, வர்த்தகம், தொழில் உள்ளீட்ட துறைகளில் வழங்கப்பட உள்ளது.

அரசு ஊழியர்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பணி புரிவோர் தவிர மற்றவர்களுக்கான பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ராஷ்ட்ரீய புரஸ்கார் இணையதளத்தைத் தவிர வேறு எந்த தளத்திலும் பரிந்துரைகளோ, விண்ணப்பங்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

லடாக் யூனியன் பிரதேசத்தில் வரும் ஆண்டு முதல் சர்வதேச கூட்டுறவு ஆண்டு கொண்டாட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையொட்டி கூட்டுறவுத் துறையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதற்கான பணியை லடாக்கின் தலைமைச் செயலர் திரு பவான் **Kotwan** முறைப்படி தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

இந்திய ராணுவத்தில் சேருவதற்கான ஆட்சேர்ப்புக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று சென்னையில் உள்ள ராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அக்னிவீர் பொதுப்பணி, அக்னிவீர் தொழில்நுட்பம், அக்னிவீர் எழுத்தர், அக்னிவீர் டிரேட்ஸ்மேன் ஆகிய பணியிடங்களுக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சிப்பாய் நிலையிலான தொழில்நுட்ப நர்சிங் உதவியாளர், ராணுவ மகளிர் காவல் பொதுப்பணி ஆகிய பிரிவுகளுக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

அக்னிவீர் பணியிடத்துக்கு தங்களது தகுதியின்அடிப்படையில் ஒரே நேரத்தில் இரண்டு பிரிவுகளுக்கு அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தகுதித் தேர்வு ஆன்லைனில் தமிழ் உட்பட 13 மொழிகளில் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் **joinindianarmy.nic.in** என்ற இணையதள முகவரியில் அடுத்த மாதம் பத்தாம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை கடைபிடித்தால் மட்டுமே தங்கள் வசம் உள்ள அமெரிக்க, இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிக்க முடியும் என்று ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

தங்களிடம் உள்ள நான்கு பேரின் உடல்களை ஒப்படைப்பதற்கும் போர் நிறுத்தம் அவசியம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் உதகையில் கோடைவிழா மலர் கண்காட்சிக்கான நடவு மற்றும் ஆயத்தப் பணிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளன.

இதில் பொதுமக்களை கவரும் வகையில் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்டுள்ள மலர் செடிகளும் இடம்பெற்றிருப்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) --- 53 செகண்ட்*

**[]<<<>>>[]**

சண்டிகர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன் லஷ்மணன் - இத்தாலியன் **Filiberto** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்த இணை 2-6, 6-4, 11-9 என்ற செட் கணக்கில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் - நிதின் சின்ஹா இணையை வென்றது.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இன்று தில்லி அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.